வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3434/அ3/2023, நாள். 31.01.2023

----

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/ நகராட்சி / மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் – 2023-2024ஆம் கல்வியாண்டு – 01.08.2023 அன்றைய நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிட நிர்ணயம் –விவரங்கள் கோருதல் – சார்பு.

பார்வை : சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 48800/சி3/இ1/2023, நாள். 11/08/2023.

•••••

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 06 முதல் 10ஆம் வகுப்புகள் வரை உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்ய ஏதுவாக 01.08.2023 அன்றைய நிலவரப்படி கல்வி மேலாண்மை முகமையில் (EMIS Entry) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்து இரு நகல்களில் தலைமையாசிரியர் கையொப்பத்துடன் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நாட்களில் இவ்வலுவலக அ3 பிரிவில் தவறாமல் சமர்ப்பிக்குமாறு அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – படிவங்கள் மற்றும்
கால அட்டவணை

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி
உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்

வேலூர் மாவட்ட கல்வி அலுவலர்( இடைநிலை) தொடர் நடவடிக்கையின் பொருட்டு

## காலஅட்டவணை

| தேதி | ஒன்றியம் | நேரம் |
|---|---|---|
| 16.08.2023 | குடியாத்தம், பேர்ணாம்பட்டு | காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை |
| 17.08.2023 | காட்பாடி, கே.விகுப்பம் | |
| 18.08.2023 | அணைக்கட்டு, கணியம்பாடி | |
| 19.08.2023 | வேலூர் நகர் மற்றும் புற நகர் | |

படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் (கீழ்காணும் விவரங்கள் அளவுகோள் பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்த்து முழுமையான அளவில் சமர்ப்பிக்க வேண்டும்)

1. அளவுகோள் பதிவேடு அசல் மற்றும் நகல் – 1
2. மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரம் (EMIS Entry) – 1 நகல்
3. IFHRMS Post Sanctioned Details – 1 copy (Excel Format)